1992 ஏப்ரல் 10]

(உ) உரிமைக்குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக் குழுவிற்கு 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 227-வது விதியின் கீழ் 1992–93 ஆம் ஆண்டிற்கு, நிதியாண்டிற்காக உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி 14 உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாள் அன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

6. அறிவிப்பு.

குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Untertakirgs), உரிமைக் குழு (Committee on Privileges) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாளை 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 20 ஆம் நாள், திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்

தாளைச் செயலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்புத்தாள்கள் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிகொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் நாள், புதன்கிழமை பிற்பகல் மூன்று மணிக்குள் விலகிக்கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

7. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)

கோரிக்கை எண் 30—சமூக நலன்.

மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" சமூக நலன் குறித்த மூலதனச் செலவு பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் 403,76,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் " எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2047. திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' உடல் ஊனமுற்ற அனைவருக்கும் மருத்துவமனை செல்ல, அலுவலகங்கள் செல்ல, இலவச பஸ் பாஸ் வசதி செய்திட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" சமூக நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 403,76,70,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 2026. டாக்டர் தே. குமாரதாஸ்.